சார்பு நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை திரு.**A.B.**நசீர் அலி., **B.A.,B.L.,**

சார்பு நீதிபதி, இலால்குடி.(FAC).

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ம் நாள் வியாழக்கிழமை.

**<u>I.A.No.2/2021 in O.S.No.763/2018.</u>**

இடையே

பால்ராஜ் .........மனுதாரர்.

மற்றும்

1. அருள்மிகு சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் மேல்நிலை பள்ளிக்காக

அதன் நிர்வாகி K. ராஜா சண்முகவேல்

2. K.S. ராஜா சண்முகவேல்

3. தமிழ்நாடு அதன் சார்பாக மாவட்ட ஆட்சியர்

திருச்சிராப்பள்ளி.

4. பள்ளி கல்வி இயக்குனர், சென்னை.

5. முதன்மை கல்வி அதிகாரி, திருச்சிராப்பள்ளி.

6. மாவட்ட கல்வி அலுவலர், இலால்குடி. ..எதிர்மனுதாரர்கள்.

<u>வழக்கறிஞர்கள்:-</u>

மனுதாரர் : திரு.T.A. ஜெயராஜ்

1ம் எதிர்மனுதாரர் : திரு.P. பாலகிருஷ்ணன்

2, 3, 4 எதிர்மனுதாரர்கள் : வழக்கில் தோன்றா தரப்பினர்

இம்மனுவானது 31.01.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.A.ஜெயராஜ், அவர்கள் முன்னிலையாகி அவர் தரப்பு பதிலுரை கேட்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பாலகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகி அவர் தரப்பில் எழுத்துப்பூர்வ வாத உரை பதிவு செய்யப்பட்டது. 2, 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றா தரப்பினராகிவிட்டனர். ஆவணங்களைப் பார்வையிட்டு, இன்று வரை பரிசீலனையில் வைத்திருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்......

<u>உத்தரவு.</u>

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரரை பிரதிவாதியாக சேர்க்க அனுமதிக்கக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10 உடன் இணைந்த பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுவோடிணைந்த பிரமாண வாக்குமூலத்தின் தமிழாக்க சுருக்கம்:–</u>

அ) மனுதாரர் அசல் வழக்கில் 3ம் தரப்பினர். மனுதாரருக்கு வழக்கின் பொருண்மைகள் தெரியும். 2ம் வாதியே வழக்கில் சொல்லப்பட்டுள்ள பள்ளியின் உரிமையாளர் என விளம்புகை கோரியும்

மற்ற பரிகாரங்கள் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இம்மனுதாரர் அறிகிறார். வழக்கு பள்ளி மற்றும் அதன் சொத்துக்கள் Sri Mariyamman Educational and Charitable Trust என்ற டிரஸ்டின் Board of Administration டிரஸ்டிகள் மற்றும் பள்ளி கமிட்டியால் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றன. 2ம் வாதி மட்டுமே பள்ளியின் நிர்வாகி என்பது தவறான வாதம் ஆகும். 2ம் வாதிக்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை. இம்மனுதாரர் பள்ளியின் செயலாளர் ஆவார். மேலும், டிரஸ்டின் நிர்வாக டிரஸ்டி மற்றும் செயலாளர் ஆவார். டிரஸ்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள வாசகங்கள்படி இம்மனுதாரரே வழக்கு தாக்கல் செய்ய முடியும். மேலும், அசையா சொத்துக்களை ரொக்கமாக மாற்றுவதற்கு தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இம்மனுதாரர் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் வழக்கை முழுமையாகவும், சரியாகவும் தீர்மானிக்க இயலும். எனவே, இம்மனு.

<u>3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

அ) மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபணம்

செய்ய வேண்டும். மனுவினை எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்க வேண்டும்.

ஆ) மனுதாரர் பள்ளிக்கு செயலாளராக இந்த எதிர்மனுதாரரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பது உண்மை என்றபோதிலும், தற்காலம் அவர் பள்ளியில் செயலாளர் அல்ல. பள்ளியின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டதற்காகவே பள்ளியின் உரிமைகள் அனைத்தும் செயலாளருக்கே உள்ளது என்பதும், பள்ளியின் செயலாளருக்கும் அதன் உரிமையாளருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றும் கூறியிருப்பது நகைப்புக்குரியது.

இ) அப்போதைய குடும்ப சூழ்நிலையும் உடல்நிலையையும் கருத்தில் கொண்டு இந்த மனுதாரரை ஸ்ரீ மாரியம்மன் மேல்நிலைப்பள்ளியை நிர்வாகம் செய்ய செயலாளராக எதிர்மனுதாரர் நியமனம் செய்திருந்தார். அதனடிப்படையில் 2008 டிரஸ்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னிட்டு அசவுகரியம் காரணமாக அவர் தொடர்ந்து செயலாளராக செயல்படுவதை தவிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாலும், இந்த மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுள்ளதாலும் இந்த எதிர்மனுதாரர் தானே சேர்மேனாகவும், டிரஸ்டியாகவும், செயலாளராகவும் செயல்பட நடவடிக்கை எடுத்து வருவதாலும், இந்த மனுதாரரால் பள்ளிக்கு ஆசிரியர் மற்றும்

ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்புவதற்காக அனுமதி கோரும், விண்ணப்பங்களை நிறுத்தி வைக்க வேண்டும் என்பதற்காகவும், 30.10.2020 தேதியிலேயே முதன்மை கல்வி அதிகாரி மற்றும் மாவட்ட கல்வி அதிகாரி, திருச்சிராப்பள்ளி அவர்களுக்கும், வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார்.

ஈ) மேற்படி வழக்கு மாரியம்மன் மேல்நிலைப்பள்ளி ஏழை குழந்தைகளுக்கு இலவச கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தொடங்கப்பட்டு அதனை எதிர்மனுதாரர் தகப்பனார் கிரையம் பெற்று, 1963 லிருந்து இந்த பள்ளியை நடத்தி வந்தார். அவருக்கு பின் அவர் பள்ளியை வாதிக்கு பாத்தியப்படுத்தி 1982 லேயே உயில் ஆவணம் எழுதிவைத்தும், அதன்படி பள்ளி உரிமை வாதிக்கு கிடைக்கப் பெற்றும் N.S.ராஜிபிள்ளை இறந்ததற்கு பின்னிட்டு வாதியின் நிர்வாகத்திற்கு வந்து நிர்வாகம் செய்துகொண்டு உயர்நிலைப்பள்ளியாக இருந்து மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி ஏழை மாணவர்களுக்கு கல்வி வழங்கி வருகிறார். அவ்வாறு நல்ல எண்ணத்தில் தொடங்கப்பட்டு நடத்தி வரும் பள்ளியை நிர்வாகம் செய்து வந்த மனுதாரர் கடன் பெறுவதற்காக மோசடி ஆவணங்களை ஏற்படுத்தி வங்கியில் கடன் பெற்றும், அது வங்கியால் கண்டுபிடிக்கப்பட்டு காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு,

மாவட்ட குற்றப்பிரிவால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, இந்த மனுதாரர் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து எதிர்மனுதாரர் பள்ளி நிர்வாகத்திலிருந்து வெளியேறும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவகாசம் கோரியவர் சட்டத்திற்குப் புறம்பாக பள்ளிக்கான ஆசிரியர்களை நியமனம் செய்ய இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாமல் நடவடிக்கை எடுத்தார். அதனால்தான் எதிர்மனுதாரர் சம்மந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு அவர்கோரிய அனுமதியை வழங்க வேண்டாம் என கடிதம் அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பும் கொடுத்துள்ளார். அதனைத் தொடர்ந்து இந்த மனுதாரரை பொறுப்பிலிருந்து நீக்கி 27.09.2021 தேதியில் தீர்மானம் இயற்றி இது குறித்து இந்த மனுதாரருக்கும், கல்வி அதிகாரிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுவிட்டது.

உ) இந்த மனுதாரர் பள்ளியின் செயலாளர் பொறுப்பிற்கு தகுதியற்றவர் ஆகிவிட்ட நிலையிலேயே செயலாளர் பொறுப்பிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்ய மனுதாரர் அருகதையற்றவர் ஆகிவிட்டார். டிரஸ்ட் ஆவணப்படிக்கு உரிமைகோர இந்த மனுதாரருக்கு எவ்வித அருகதையும் கிடையாது. மனுதாரரின் மனு முகாந்திரம் அற்றது. இவர் செயலாளர்

பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்ட நிலையில் டிரஸ்ட் ஆவணப்படிக்கு தனக்கு அதிகாரம்உள்ளது என்று கூற இயலாது. இந்த வழக்கைப் பொருத்தவரை இந்த மனுதாரர் தேவையற்ற தரப்பினர் ஆவார். மனுதாரரின் மனுவை நிராகரிக்க வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அசல் வழக்கில் மனுதாரரை பிரதிவாதியாக சேர்க்க அனுமதி வழங்கப்பட வேண்டுமா இல்லையா என்பதேயாகும்.

5. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. தீர்வு :-</u>

அ) ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. ம.சா.ஆ.1 ஆன டிரஸ்ட்ன் ஆவணம், மனுதாரரை மேற்சொன்ன ஸ்ரீ மாரியம்மன் கல்வி அறக்கட்டளை டிரஸ்ட்டிகளில் ஒருவராக காண்பிக்கிறது. மனுதாரர் பள்ளியின் செயலாளர் பொறுப்பில் இருந்தார் என்பது எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. வழக்கு சொத்து தனக்கு மட்டுமே சொந்தம் என எதிர்மனுதாரர் கோரிக்கை வைத்திருக்கும் நிலையில் டிரஸ்ட் ஆவணத்தில் கண்டுள்ள முக்கியமான நபர் அதை அடிப்படையாக

வைத்து தன்னை வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என வைத்திருக்கும் கோரிக்கையை எடுத்த எடுப்பில் நிராகரிப்பது சரியானது அல்ல. மனுதாரர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுவிட்டாரா, அவருக்கு அதிகாரம் எதுவும் இருக்கிறதா என்பது குறித்த சங்கதிகளை அசல் வழக்கில் தான் முடிவு செய்ய முடியும்.

ஆ) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு முன் பிணை சம்மந்தமான உத்தரவாகும். அதில் மனுதாரர் நீக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தாலும், அதை மனுதாரர் ஒத்துக்கொள்ளவில்லை. தனது பொறுப்பை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார். எனவே, அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வைத்து மனுதாரர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார் என்ற முடிவுக்கு வரமுடியாது. மனுதாரருக்கு அசல் வழக்கை எதிர்கொள்ள முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகைக்கான உத்தரவு எதுவும் இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 09.02.2023ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்.திரு.A.B.நநீர் அலி, B.A.,B.L.,

சார்பு நீதிபதி,

இலால்குடி.(FAC)

<u>1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் இல்லை :–</u>

**<u>2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

**ம.சா.ஆ.1 – டிரஸ்ட் பத்திரம் – உண்மை நகல்**

<u>3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை:–</u>

ஒப்பம்.திரு.A.B.நநீர் அலி, B.A.,B.L.,

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,

இலால்குடி.(FAC)